# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in
Website: www.tnteu.ac.in


No.TNTEU/COE/Exam/Circular/2022/240 நாள்: 12.02.2022

**முனைவர். M.கோவிந்தன், Ph.D**
**தேர்வாணையர் (பொ)**

பெறுதல்

முதல்வர்கள்
அனைத்து இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** TNTEU– இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - 2021 – 22 ஆம் கல்வியாண்டு - B.Ed/B.Ed (Spl. Edu.)/M.Ed/M.Ed (Spl. Edu.)/B.Sc., B.Ed./ B.A., B.Ed.- பட்டவகுப்புகள் –மாணவர் சேர்க்கை Nominal Roll அனுப்புதல் மற்றும் தேர்வு கட்டணம் செலுத்துதல் - சார்பு.

*****

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளில் 2021–22 ஆம் கல்வியாண்டில் B.Ed/B.Ed (Spl. Edu.)/M.Ed/M.Ed (Spl. Edu.)/B.Sc., B.Ed./B.A., B.Ed. பட்டவகுப்புகளில் சேர்க்கப்பட்டு, Eligibility Verification முடித்த கல்லூரிகளுக்கு, உடனடியாக கல்லூரி Login ID வாயிலாக Nominal Roll அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளது. எனவே, கல்லூரி முதல்வர்கள், தங்கள் கல்லூரியின் Login ID- யில் அனுப்பப்பட்டுள்ள சேர்க்கை மாணாக்கர்களுக்கான Nominal Roll கிடைத்தவுடன் அதில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால் அதனை **சிவப்பு மை பேனாவினால்** திருத்தம் செய்து, Nominal Roll படிவத்தை Scan செய்து, கிடைக்கப்பெற்ற 48 மணி நேரத்திற்குள் tnteubednominal2021@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு காலதாமதமின்றி அனுப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. **காலதாமதம் ஏற்படுமாயின் தேர்வுகள் offline-ல் மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது.**

மேலும், பல்கலைக்கழகமானது B.Ed/B.Ed(Spl.Edu.)/M.Ed/M.Ed(Spl.Edu.)/B.Sc., B.Ed./ B.A., B.Ed.-பட்டவகுப்புகளில் (Semester-I) பயிலும் மாணாக்கர்களுக்கு 28.02.2022-ஆம் தேதி முதல் பல்கலைக்கழக தேர்வினை Online–ல் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. எனவே, கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியின் திருத்தம் செய்யப்பட்ட Nominal Roll பல்கலைக்கழகத்திடமிருந்து கிடைக்கப்பெற்றவுடன் காலதாமதமின்றி தேர்வுக்கட்டணத்தை பல்கலைக்கழக இணையதளம் வாயிலாக செலுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதம் ஏற்படுமாயின், தேர்வுகள் Offline-ல் மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே, கல்லூரி முதல்வர்கள் தாமதமின்றி Nominal Roll – திருத்தம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணத்தை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் செலுத்தி, திட்டமிட்டப்படி தேர்வினை நடத்துவதற்கு தங்களது மேலான ஒத்துழைப்பினை நல்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY CONTROLLER OF EXAMINATIONS

M. Govindan 12.2.2022
தேர்வாணையர் (பொ)